# காங்கிரசின் கர்வம் அடங்கும் காலம் அதிவிரைவில்

Phone No 4502 — விலை அரை அணா — Regd. No. M. 5458 — இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (15—3—50) வெளியூர் (16—3—50) [ இதழ் 194

## வந்து சேரும்

## அன்று நாம் சொன்னதெல்லாம் இன்று சட்டமாகிறது !

## சுயமரியாதைக்காரனின் கனவுகள் நினைவாவது திண்ணம்

## வாட்டமுறும் தமிழர் வாழ வழி வகுக்க வேண்டாமா ?

## குறிஞ்சிப்பாடி மாநாட்டில் அண்ணாத்துரை முழக்கம்

'தேர்தலில் போட்டியிடும் கட்சி பலாத்காரத்தை உபயோகிக்கும் கட்சிகளையே அவர்கள் கண்டுள்ளனர். பதவியையும் பலாத்காரத்தையும் விட்ட அரசியலை அடிப்படையாகக்கொண்டு, சமுதாயத்தைப் பற்றியும், பொருளாதாரத்தைப் பற்றியும், தான் நம்பும் கொள்கைகளைப் பற்றியும் இடையறாது பேசும் கட்சியை அவர்கள் இதுவரைக் கண்டதில்லை. தேர்தலில் போட்டியிடும் கட்சியைக் கண்டால் அவர்கள் பயப்படுவார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியாக இருந்தால் பலாத்காரத்தை உபயோகிக்கிறதென்று ஒழித்திருப்பார்கள். இரண்டும் இல்லையே, இக்கட்சி என்ன புரியாத புதிராக இருக்கிறதே என்ற பீதி. ஆம் அவர்கள் பீதியடையத்தான் வேண்டும். நம் செல்வாக்கை அரசாங்கம் அலட்சியமாக எண்ணினால், அவர்கள் அறியாமையை குறித்து நாம் என்ன கூற முடியும்" என்று தோழர் அண்ணாத்துரை குறிஞ்சிப்பாடி மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே!!

தென் ஆற்காடு மாவட்டத்தில் இவ்வளவு சிறப்புடன் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெறுவதைக் காணப் பெருமையடைகிறேன். இம்மாவட்டத்தில், இப்பொழுது குறிஞ்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு, கடலூரில் திராவிடக் கழக மாநாடு, வடலூரில் காங்கிரஸ் மாநாடாகப் பல மாநாடுகள் நடப்பதால், இம்மாவட்டம் எல்லா அரசியல் கொள்கைகளையும் தெரிந்துகொள்ள நல்ல வாய்ப்பைப் பெற்றுள்ளது அதுவுமன்றி இம்மாவட்டம் நல்ல உத்தமரை ஆட்சிபீடத்திற்குத் தந்தது. உத்தமருக்கு அங்கு இடமில்லையென்றதும் அவரைத் திரும்ப அழைத்துக்கொண்டது. இம்மாவட்டம் மிகவும் ஆபத்தானது என்று காங்கிரஸ் மேலிடமே அறிவித்துள்ளது. இவ்வளவு ஆபத்தான இடத்தில், நம்முடைய வேகம் குறையாமல் இருப்பதற்குப் பெருமையடைகிறேன். நீங்கள் கேட்கி...

...றீர்கள், சர்க்கார் ஒற்றர் அதை விட அதிகமாகக் கேட்கிறார். அவர் ஏதாவது தவறி எழுதிவிட்டால் எல்லோருக்கும் ஆபத்து. திராவிட முன்னேற்றக் கழகம் மந்திரிகளின் தலைகளை அறுக்கவே பேசுகிறதென்று கூறியதாக வைத்துக்கொள்வோம். தலை, தலையென்று எழுதப்பட்டால் என்ன கதி? ஒற்றரின் நிலையே ஆபத்தாகிவிடும்.

### புரியாத புதிர்!

திராவிட முன்னேற்றக்கழக நிலையை நண்பர்கள் கூறினார்கள். இன்று சிறு சிறு கிராமங்களிலும் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டை யார் ஆள்கிறார்கள், எப்படி ஆள்கிறார்கள், என்பதை அறிந்துகொள்ள மக்கள் ஆவலுடன் இருக்கிறார்கள். இந்த விழிப்புணர்ச்சிதான் நாங்கள் பட்ட பாட்டின் விளைவு. இன்றைய அரசாங்கம் நம் கழகத்தைப் பற்றிப் பெருங் கலக்கமடைந்...

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

## இந்தியா தன் நாணய மதிப்பை உயர்த்தவேண்டும்

—(0)—

### பிரிட்டிஷ் பத்திரிகை யோசனை

லண்டன், மார்ச். 14—

இந்தியா—பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு தகராறு தீர உள்ள ஒரே வழி, இந்தியா தன் ரூபாய் நாணயத்தின் மதிப்பை 10% உயர்த்தவேண்டும் என்று "பைனான்ஷியல் டைம்ஸ்" எழுதுகிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதியிருப்பதாவது:— இந்தியாவின் பொருளாதார நிலைமை நாணய மதிப்பு குறைவுக்குப் பின் பெருகுவாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க, இதர நாடுகள் தயாராகவிருக்கின்றன.

இந்தியாவின் மாத வியாபார நிலைமை அபிவிருத்தியையே காட்டுகிறது.

## சோவியத் பொதுத் தேர்தல் முடிந்தது

—(0)—

## தோழர் ஸ்டாலினுக்கு அமோக ஆதரவு!

லண்டன், மார்ச். 13

நேற்று நடைபெற்ற சோவியத் பொதுத் தேர்தலில் மாஸ்கோப் பகுதியில் அபேட்சகராக நின்ற தோழர் ஸ்டாலினுக்கு நூற்றுக்கு நூறு பங்கு வோட்டுகள் கிடைத்திருக்கின்றன.

மாஸ்கோ மக்கள் மட்டுமின்றி மாஸ்கோவுக்கு வெளியிலிருந்து வந்த 80,000 மக்கள் தோழர் ஸ்டாலினுக்கே தமது வாக்கை அளித்துள்ளார்கள்.

வோட்டு செய்தவர்களின் எண்ணிக்கை, வெற்றி பெற்றவர்களின் பெயர் முதலியன இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படுமெனத் தெரிகிறது.

திங்கட்கிழமை வெளியான பத்திரிகைகளெல்லாம் சோவியத் ஜனநாயகமே வெற்றி பெறும் என பிரமாதமாக எழுதியுள்ளன. 'பிராவ்தா'வும் "இஸ்வெஸ்தி"யாவும் ஸ்டாலின் வோட்டுப் பெட்டியில் ஓட்டுப்போடும் காட்சியைப் புகைப்படம் பிடித்துப் பிரசுரித்துள்ளன.

### அரபு அலுவலகம் மூடப்பட்டது

லண்டன், மார்ச் 14

லண்டனிலுள்ள அரபு காரியாலயம் அதை நடத்தப் போதிய பணம் இல்லாததன் காரணமாக மூடப்பட்டுவிட்டது.

வாஷிங்டனிலுள்ள அரபு ஆபீஸும் சில மாதங்களுக்குமுன் மூடப்பட்டது.

## பழைய புத்தகங்களை விற்காதே!

லண்டன், மார்ச். 14—

ஹங்கேரி தெருக்களில் யாரும் பழைய புத்தகங்கள், சஞ்சிகைகள் விற்கக்கூடாதென்று ஹங்கேரிய சர்க்கார் விசித்திர உத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கின்றனர்.

மே 5. (1945)க்குமுன் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களை விற்கக்கூடாதென்று செக்கோஸ்லேவியா பிறப்பித்துள்ள உத்தரவைப் பின்பற்றியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## பிரிட்டிஷ் - இந்தோனேஷ்ய வர்த்தக உறவு

—(0)—

### லண்டனில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது

லண்டன், மார்ச். 14—

இப்பொழுது லண்டனில் பிரிட்டிஷ், இந்தோனேஷ்ய பிரதிநிதிகளுக்கிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளின் விளைவாக இவ்விரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவு ஏற்படும் எனத் தெரிகிறது.

ஏற்கனவே இருந்த வர்த்தக உடன்படிக்கை சென்ற ஆண்டோடே முடிவடைந்துவிட்டது.

இந்தோனேஷ்ய பொருளாதார மந்திரியின் ஆலோசகரான டாக்டர் அஸ்மான் இந்தோனேஷ்ய குழுவின் தலைவராக இங்கு வந்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது தெரியவில்லை.

லண்டனில் இந்தோனேஷ்ய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ஸுபாண்டரியோ ஜாகர்தாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். இவ்வாரம் அவர் பதவி ஏற்பார் எனத் தெரிகிறது.

## ரஷிய ஜெர்மனியில் படை பலம் அதிகரிக்கிறது

—(0)—

## வல்லரசுகள் வட்டாரத்தில் கவலை!

லண்டன், மார்ச். 14—

கிழக்கு ஜெர்மனியில் ராணுவ போலீஸின் எண்ணிக்கை ஏராளமாக அதிகரித்து வருகிறதென்றும், பெர்லினைக் கைப்பற்றுவதற்காகவே இம்மாதிரிப் படை குவிக்கப்படுகின்றனவோ என்றும், நேச நாடுகளின் வட்டாரங்களில் பெருங்கவலை ஏற்பட்டிருக்கிறது.

ரஷ்ய ஆதிக்கமுள்ள ஜெர்மன் ராணுவப் போலீஸில் 22,000 பேர்களுக்கு மேல் இருப்பதாக கூறப்படுகிறது. கம்யூனிஸ்ட் போலீஸ் படையில் 2,64,000 பேர் இருப்பதாக மேற்கு ஜெர்மனியிலிருந்து வெளிவரும் பெர்லின் பத்திரிகைகள் கூறுகின்றன. ரஷ்ய அதிகாரிகள் பீரங்கி, டாங்கி நிபுணர்கள் ஆகியோர்களும் ஏராளமாக இருக்கிறார்களாம்.

போலீஸ் என்ற பெயரிலுள்ள இந்த ராணுவம், ஜெர்மன்யுவர்களைக் கொண்டே அமைக்கப்பட்டதாகும், எனக் கூறப்படுகிறது.

## ஸ்டர்லிங்கை மாற்ற பிரிட்டிஷ் திட்டம்

பாரிஸ், மார்ச். 14—

இப்பொழுது பிரிட்டிஷ் நிதி நிபுணர்களும், இங்கிலாந்து பாங்கி அதிகாரிகளும் தயாரித்து வரும் புதுத் திட்டத்தை மார்ஷல் உதவி பெறும் 16 நாடுகள் ஏற்றால் மேற்கு ஐரோப்பாவில் ஸ்டர்லிங்கைச் செலுத்த அவை நாட்டு கரன்சிகளைப் பெறுவது சாத்தியமாகுமென்றும், அநேகமாக இவை மூலம் இந்த ஏற்பாடு அமுலுக்கு வரலாம் என்றும் கூறப்படுகிறது. இதனால் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷாருக்கு மிகவும் சௌகரியம் ஏற்படும்.

இப்புது ஸ்டர்லிங் திட்டம் மார்ஷல் உதவி பெறும் நாடுகளின் அங்கீகாரத்திற்காக அடுத்த வாரம் அனுப்பப்படுமாம்.

## பரூக் மன்னருக்கு பதவி

லண்டன், மார்ச். 14—

எகிப்து மன்னர் பரூக் பிரிட்டிஷ் ராணுவத்தின் கௌரவ ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை இங்கு வந்துள்ள லண்டன் கெஸட் அறிவித்திருக்கிறது.

பிரிட்டிஷ் எகிப்து உறவு பலப்படுத்த இந்த நியமனம் மிகவும் உதவும் என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்தக் கௌரவப் பதவியை வகிக்கும் மற்றொரு பிரிட்டிஷல்லாதார் ஹைதராபாத் நிஜாம்தானும்.

பாட்டியாலா, காஷ்மீர், பிகானீர் சமஸ்தானாதிபதிகள் கௌரவ லெப்டினெண்ட் ஜெனரலாக பிரிட்டிஷ் ராணுவத்தில் இடம் பெற்றவர்கள். போபால் நவாப் கௌரவ மேஜர் ஜெனரல்.

ரெஜிமெண்டல் கௌரவ கர்னல் களாக நார்வே, டென்மார்க், பெல்ஜிய மன்னர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் பதவி பெற்றிருக்கின்றனர்.

மாலை மணி

சென்னை 15—3—50 புதன்கிழமை

# பெயரினால் ஏற்றம் பெறவில்லை!

"ஹரிஜனங்கள்"—அப்படி அழைக்கப்படுகிறார்கள், காங்கிரஸ்காரர்களால், இந்நாட்டின் பழங்குடி மக்களினத்தில் பிறந்து தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்கள். பெயர், ஆண்டவனின் அன்பைப் பெற்றவர்களாக அவர்களை மதிக்கச் சொல்லுகிறது; நிலையோ எனில், அவர்கள் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் தன்மையையே உணர்த்துகிறது!

அவர்கள் இந்நாட்டின் பழங்குடி மக்கள்—உழைப்பு ஒன்றையே செல்வமாகக் கொண்டவர்கள்—வைதிக இந்துமதத்தின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்கள்—அதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கொடுமைகளைத் தாங்கிவருபவர்கள்—பிறப்பின் காரணமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள்—இப்படிப்பட்டவர்கள், இன்னமும் வேதனைக்குள்ளாக்கப்பட்டுவருகிறார்கள்! அவர்கள் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. காரணம், வைதிக உள்ளம் படைத்த ஆதிக்க வகுப்பாரின் ஆதிக்கம், இன்னமும் நடைபெற்று வருகிறது என்பதேயாகும்.

இதுவரையில், சட்டத்தின் முன்னும் அவர்கள் தீண்டப்படாதவர்களாக மதிக்கப்பட்டு வந்தார்கள்—இப்பொழுது சட்டத்தின் முன் அவர்கள் மக்களாகக் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். எனினும், வைதிக உள்ளங்களின் முன்—அவர்கள் ஆதிக்க அதிகார முனைகளின்முன், தாழ்த்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவுமே கருதப்படுகிறார்கள். வைதிகர்கள் உள்ளத்தில் விளையாடி நிற்கும் வஞ்சக மிருகம், இன்னமும் வேட்டையாடப்படவில்லை! வஞ்சக வைதிக மிருகத்தை வேட்டையாடி அழிக்கும் வேலையில், தென்னாட்டில் தன் மதிப்பியக்கத்தார் ஈடுபட்ட வந்தக் காரணத்தால், மிருக சுபாவம் படைத்த பலர், ஓரளவுக்கு மனித சுபாவமுடையவர்களாக மாறினர்-தீண்டாமைக் கொடுமை ஓரளவுக்குக் குறைந்தது. எனினும், வைதிக வெறியர்கள், அவர்கள் பணி சிறந்து விளங்க இடங்கொடாமல் தடை செய்து வருகின்ற காரணத்தால்தான், இன்னமும் சமுதாயக் கொடுமைகள் நிகழ்ந்து வருகின்றன.

அறிவுடம்பட்ட வாழ்வை அமைப்பதிலே கவலை உள்ளங் கொண்டு விளங்கும் பகுத்தறிவாளர்கள், மனிதனை மனிதன் என்று மதிக்காமல் பிறப்பினால் பேதங்கற்பித்து, உரிமைகளைப் பறித்து வாழும் சாதனம்மதமாயினும், சாஸ்திரமாயினும், வேதபுராணமாயினும், கடவுளாயினும், சட்டமாயினும் அவர்களை எல்லாம் அழித்து, யாவர்க்கும் சமசந்தர்ப்ப வசதிகள் அளிக்கவேண்டுமென்று கூறி வந்தார்கள்—வருகிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்களோ, காந்தியாருடைய தயவுக்காகப் பெயரை மட்டும் "ஹரிஜனம்" என்று மாற்றி அமைத்து விடுவதாலேயே, அவர்களுக்குள்ள இழிவுநிலை நீங்கிவிடும் என்று எண்ணுகின்றனர்—எண்ணி செயலாற்றுகின்றனர்.

"ஹரிஜனம்" என்ற சொல், தாழ்த்தப்பட்ட மக்களின் இழிவுநிலையைப் போக்க பயன்படவில்லை—அவர்களைப் பழைய நிலையிலேயே பிரித்து வைத்து எண்ணவே பயன்படுகிறது. 'சண்டாளர்கள்,' 'பஞ்சமர்கள்' என்பனபோன்ற சொற்கள் யாரைக் குறிப்பனவாக மேல் வகுப்பாரும் பிறரும் கருதினரோ, அவர்களையே தான் "ஹரிஜனம்" என்ற சொல்லும் குறிப்பதாகக் கருதுகின்றனரேயல்லாமல். சொல்லுக்காக உயர்வாக மதித்துவிடவில்லை. தாழ்ந்தப்பட்டவர்கள் மற்ற மக்களோடு இரண்டறக் கலந்துவிடுவதற்கான வகைகளில் செயல்கள் ஆற்றப்பட வேண்டுமே யொழிய, அவர்களைப் பிரித்து வைத்துக் காட்டும் முறைகள் இருக்கக் கூடாது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்து சமுதாயம் இழைத்த கொடுமைகளின் காரணமாகக் கல்வி வசதி, பொருளாதார வசதி, அரசாங்க அதிகார வசதி போன்றவைகள் மறுக்கப்பட்டுவந்தன. அந்த வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுக்க, இன்றைய அரசாங்கம் முன் வந்திருப்பது பாராட்டத் தக்கதுதான்! அப்படிப்பட்ட வசதிகளைத் தனியே பிரித்து வைத்துக் கொடுக்காமல், மற்றவர்களோடு இணைத்து வைத்து அவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறோம்? எடுத்துக் காட்டாக 'ஹரிஜன ஹாஸ்டல்," "ஹரிஜன பள்ளிக்கூடம்," "ஹரிஜன காலனி," "ஹரிஜன ஆஸ்பத்திரி' என்று அவர்களுக்கு என்றே பிரித்து வைத்துக் காட்டுவானேன்? பிற வகுப்பு மாணவர்கள் இருக்கும் ஹாஸ்டலில், தாழ்த்தப்பட்டவர்களையும் சேர்த்து வைத்து, சாப்பாடு, விடுதி வசதிகளை அரசாங்கச் செலவில் இலவசமாக ஏன் அவர்கள் பெறும்படி அரசியலர் செய்யக் கூடாது?

மற்றமக்கள் நுகரும் வசதிகளை எல்லாம், அந்த மக்களோடு இணைந்து இருந்து, இலவசமாகவும், சலுகைகள் பெற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் பெறும்படி செய்வதே, சிறந்த இலட்சியமாகும்.

"மற்ற வகுப்பினரிடத்திருந்து ஹரிஜனங்கள் எப்போதும் விலகியே இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. எல்லா வகுப்பினரும் சேர்ந்து வாழ்ந்து வர வேண்டும் என்றும், எல்லோரும் ஒரு இனமாக இருக்க வேண்டும் என்றும், ஒரு வகுப்புமற்றொன்றை வேறுபட்டதாக எண்ணி நடக்கக் கூடாது என்றுந்தான் அரசாங்கம் விரும்புகிறது." என்று அரசாங்கத்தின் கொள்கையைக் கிராம அபிவிருத்தி மந்திரி தோழர் பரமேஸ்வரன் விளக்குகிறார். கொள்கை வரவேற்கத்தக்கதுதான். ஆனால் நடை முறையைப் பார்த்தால், "ஹரிஜனங்களை" தனியே பிரித்து வைக்கும் முறையில் தான், ஹாஸ்டல்—பள்ளி—காலனி—ஆஸ்பத்திரி ஆகியவைகள் நடைபெறுகின்றன. ஒன்று, மற்றவர்களோடு தாழ்த்தப்பட்டவர்களையும் இணைத்து விட வேண்டும், அல்லது தாழ்த்தப்பட்டவர்களோடு மற்றவர்களைக் கொண்டுவந்து இணைக்க வேண்டும். இரண்டையும் செய்யாமல், எல்லாத் துறைகளிலும் "சேரி"களை உண்டாக்கவே அரசாங்கம் விரும்பினால், அந்த அளவுக்கு உயர் சாதி ஆதிக்க ஆணவம் ஆட்சிபுரிகிறது என்றுதான் உலகோர் கைகொட்டிநகைப்பர்.

தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், புறக்கணிக்கப்பட்ட வகுப்பினர் எல்லோரும் வாழ்வில் சமநிலையை மற்ற உயர் வகுப்பினரோடு பெறும் வரையில், வகுப்புவாரிப் பிரதிநித்வ வசதிகளை அவர்கள் பெற்றுத்தான் தீரவேண்டும். அப்படிப் பெறும்போது தனியே "தீண்டப்படாதவர்" களாக இருந்து பெறக் கூடாது; மற்ற மக்களோடு இணைந்து வாழ்ந்தே சலுகைகளையும், வசதிகளையும் பெறும்படி செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்கள் உயர்த்தப்படவேண்டும் என்பதிலே, நாட்டிலுள்ள மக்களுக்கு ஒருவித நல்லெண்ணம் வந்திருக்கிறது. அதன் பயனாகக் காங்கிரஸ் கோடிக்கணக்கான ரூபாய்களைத் திரட்டியிருக்கிறது. அந்த ரூபாய்கள் உள்ளபடியே தாழ்த்தப்பட்டவர்களுக்கு—அதாவது 'ஹரிஜனங்களுக்கு" ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுகின்றனவா என்றால், இல்லை என்றபதில் "காங்கிரஸ் ஹரிஜனங்களி"டமிருந்தே வருகிறது. இடையிலிருக்கிற உயர் வகுப்புப் "பொச்சாளி"கள் நிதிகளை உண்டு கொழுத்துவருகின்றன!

தாழ்த்தப்பட்டவர்கள் மக்களாக நடமாட வேண்டுமாயின், பேதங்கற்பிக்கும் வைதிகம் ஒழிய வேண்டும், 'தீண்டப்படாதவர்"களாகவே வைக்கும் கொடுமை நீங்க வேண்டும், அவற்றிற்கு ஆதாரமாக இருக்கும் மதம்—கடவுள்—சாஸ்திரம்—புராணம்—இதிகாசம் எல்லாம் வழிய வேண்டும், இவற்றையெல்லாம் செய்யாமல்—செய்ய முன்வருபவர்களையும் தடைசெய்து கொண்டு, "ஹரிஜனம்" என்று பெயரிட்டு விட்டதாலேயே அவர்கள் இழி நிலை நீங்கும் என்றும் கருதிக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் நாடாளுகிறார்கள்! ஆண்டவனின் மக்கள் என்றபெயர், ஆண்டவன் அருளையும்பயக்கவில்லை; தாழ்த்தப்பட்டோரின் அவதிகளையும் போக்கவில்லை! அவதிகளைப் போக்கவல்லது ஆண்டவன் அல்ல, அறிவுடம்பட்ட ஆட்சியே! பெயர் ஏற்றம் அளிக்கவில்லை! அவர்களை அப்படியேதான் வைத்திருக்கிறது!

# மலையாளப் பகுதியில் போலீஸ் தர்பார்!

## தி. மு. கழகத் தோழர்களை அடித்து மிரட்டி, ஒடுக்க முயற்சி?

### பலராமபுரத்தில் கழகத் தோழர்கள் பட்ட அவதி

பலராமபுரம், (மலையாளப்பகுதி) மார்ச். 9—

சேலம் சிறையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டிப்பதற்காக இவ்வூரில் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று கூட்ட 7—3—50ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் தி. மு. கழகம், புரோகமன ஸாஹித்ய ஸமிதி (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) நெசவுத் தொழிலாளர் யூனியன், உழவுத் தொழிலாளர் சங்கம் ஆகிய பல வேறு சங்கங்கள் கலந்துகொள்ள இருந்தன.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே ரிசர்வ் போலீசும், இரண்டு லாரிகளிலுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்களும், கம்யூனிஸ்ட்கள் யாரேனும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டால் உடனே கைது செய்ய அதுவே தக்க சமயமெனக் கருதி அங்கு வந்து காத்திருந்தனர். ஆனால் வந்திருந்த போலீசார் தி. மு. கழக அங்கத்தினர் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் வேலை பார்க்கும் இடம், வேலை இவற்றைப் பற்றியெல்லாம் விசாரித்தனர். பின்னர் கழகப் பொருளாளர் வேலை பார்க்கும் நெசவாலைக்கு வந்து அங்கு வெளியில் நின்றிருந்த தோழர்களில் ஆ. அருணாசலம், மா. ராமனூர், ராம. நாகமணி (முதல் இரண்டு பேரும் செயலாளர், பொருளாளர் ஆவர்) மூன்று தோழர்களையும் எக்கட்சியிலும் சேராத இரண்டு பேரையும் வெளியில் நிறுத்திவிட்டார். பின்பு நெசவாலையின் உள்ளே சென்று கம்யூனிஸ்டுகள் யாரேனும் ஒளிந்திருக்கின்றனரா வென்று பார்த்தனர். அங்கு ஒரு தொழிலாளியான தோழர் ஐயனைப் பிடித்துக்கொண்டு வெளியில் வந்து நிறுத்த, தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஆ. அருணாசலத்தைப் பல கேள்விகள் கேட்டனர். "உங்கள் இயக்கத்தின் பெயரென்ன?" என்றதற்கு சமூகச் சீர்திருத்தம் செய்வது என்று பதில் கூறினார். அந்த இயக்கத்தின் தலைமை ஆபீஸ் எங்கேயிருக்கிறது? என்றதற்கு சென்னையிலிருக்கிறதென்று கூறினார். அப்படியும் சந்தேகம் தீரவில்லை. கழகத் தோழர்களையும் கம்யூனிஸ்டுகள் என்றே தவறாக நினைத்து, அங்கிருந்த அமிர்தம், ஐயன் என்ற இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். அழைத்துச் செல்லும்போது, தோழர் அமிர்தம் தனது சட்டையை மேலே போட்டுக்கொள்ளும் தருவாயில் ஒரு போலீஸ்காரர் அந்தத் தோழரின் முதுகில் ஒரு பலமான அடி கொடுத்தார். பிறகு சட்டையைக் கழற்றிவிட்டு அவரை அழைத்துச்சென்று இரவு 8 மணி வரை காவலில் வைத்திருந்து வெள்ளைச் சொல்லி கண்டபடி திட்டி, சொந்த ஜாமீனில் விடுதலை செய்துள்ளனர்.

## 'ஆரியமாயை' வழக்கு

### மீண்டும் ஒத்திவைப்பு

திருச்சி, மார்ச். 13—

'ஆரியமாயை' என்ற நூலை எழுதியமைக்காகவும், வெளியிட்டமைக்காகவும் தோழர்கள் சி. என் அண்ணாத்துரை கண்ணப்பன் ஆகிய இருவர்மீதும் அரசாங்கத்தாரால் குற்றஞ்சாட்டப்பட்டு, தொடரப்பட்டிருந்த வழக்கு, இன்று திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் இம்மாதம் 23-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதோடு ஒன்பது முறை இப்படியே ஒத்திபோடப்பட்டு, 10-வது முறையாக 23-ந் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளனர். தோழர் அண்ணாத்துரை சார்பாக வழக்கறிஞர் விருத்தாசலம் ஆஜரானர். கோர்ட்டுக்கு உள்ளூர் முக்கிய இயக்கத் தோழர்களும், வந்திருந்தனர். (ந-நி)

## கம்யூனிஸ்டுத் தோழர் சுட்டுக் கொல்லப்பட்டார்

பீமாவரம், மார்ச் 10—

தலைமறைவாயிருந்து வந்த கம்யூனிஸ்டுத் தோழர் தேவரகொண்ட சுப்பாராவ் என்பவர் செட்டிப்பேட்டை என்னும் ஊருக்கருகில் மார்ச் 8-ந் தேதி இரவு கைது செய்யப் முடியாத காரணத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## இ.தே.ரா. கலைக்கப்படும்

சென்னை, மார்ச். 14—

இந்தியாவிலுள்ள இந்திய தேசிய ராணுவ விசாரணைக் கமிட்டிகள் நடத்துவதற்குப் போதிய பண வசதியில்லை என்றால் கலைத்துவிடலாம் என்று அகில இந்திய இ.தே.ரா. விசாரணைக் கமிட்டி பொதுக் காரியதரிசி எல்லாக் கிளைகளுக்கும் சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

இதன் பேரில் சென்னை இ. தே. ரா. விசாரணைக் கமிட்டி பணவசதி குறைவின் காரணமாக கலைக்கப்படவிருக்கிறது.

## சிங்கப்பூரில் மக்கள் தொகை அதிகரிப்பு

சிங்கப்பூர், மார்ச். 14—

சென்ற ஆண்டில் சிங்கப்பூரில் இறந்துபோன ஒவ்வொருவருக்கும் பதிலாக 4 பேர் பிறந்திருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகிறது. 1949ல் ஜனனமானவர்களின் தொகை 46 69 மரணமடைந்தவர்களின் தொகை 11621.

பிறந்த குழந்தைகளில் பெரும்பாலும் சீனக் குழந்தைகள். 8641 இந்தியக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. —[illegible]

# தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

16 - 3 - 50

ஆனைமலை :— சி. பி. சிற்றரசு

17 - 3 - 50

கல்லல்குண்டு :— சி. பி. சிற்றரசு

# காங்கிரசின் கர்வம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. தேர்தலில் போட்டியிடும் கட்சி பலாத்காரத்தை உபயோகிக்கும் கட்சிகளையே அவர்கள் கண்டுள்ளனர். பதவியையும் பலாத்காரத்தையும் விட்ட அரசியலை அடிப்படையாகக்கொண்டு சமுதாயத்தைப் பற்றியும் பொருளாதாரத்தைப் பற்றியும்தான் நப்புக் கொள்கைகளைப் பற்றியும் இடையறாது பேசும் கட்சியை அவர்கள் இதுவரை கண்டதில்லை. தேர்தலில் போட்டியிடும் கட்சியைக் கண்டால் அவர்கள் பயப்படுவார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியாக இருந்தால், பலாத்காரத்தைஉபயோகிக்கிறதென்று ஒழித்திருப்பார்கள். இரண்டும் இல்லையே, இக்கட்சி என்ன புரியாத புதிராக இருக்கிறதே என்ற பீதி ஆம் அவர்கள் பீதியடையத்தான் வேண்டும். நம் செல்வாக்கை அரசாங்கம்அலட்சியமாகஎண்ணினால் அவர்கள் அறியாமையைக் குறித்து நாம் என்ன கூற முடியும்! இன்று நம் கழகத்துக்கு 400-க்கு மேற்பட்ட கிளைகள்; தலைவரிடம்சண்டை பிடித்துக் கொண்டு வெளியேறியவர்களுக்கு இவ்வளவு ஆதரவு. நம் கிளைக் கழகங்கள் ஆந்திர நாட்டில், ஆனந்தபூரையில் திருவிதாங்கூரிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காங்கிரஸ் யோசிக்கட்டும். பெரியார் ஒரு பக்கமும் நாங்கள் ஒரு பக்கமும் போதுவோம். இரண்டையும் கணக்கிட்டு; கூட்டிப்பார்த்தால் என்ன நடக்குமென்று பார். இரு வேறு படைவரிசைகளாகப் பிரிந்திருந்தாலும்மாறுபட்டக் கருத்துள்ளவர்களல்ல. நேற்று பேசியதைத் தான் இன்று பேசுகிறோம், இனியும் பேசுவோம். தலைப்பைத்தான் மாற்றினோம், திட்டங்கள் மாறவில்லை.

### இப்படைத் தோற்கின்...?

நாங்கள் விளங்காத புதிர், தேர்தல் இல்லை—பலாத்காரம் இல்லை—நாங்கள் யார்? எதற்கு இருக்கிறோம்? திராவிட முன்னேற்றக் கழகம் என்ன ஆகவேண்டுமென்று அரசாங்கம் எண்ணுகிறது? வேண்டுமானால் எங்கள் கழகத்தை உங்கள் பாதுகாப்புக்காக எடுத்துக்கொண்டு பார். உடனே புதுடில்லி நடுங்காதா? அரும்பு விட்ட மீசையள்ள படை, குடும்பப் பற்றில்லாத படை, இப்படையின் தோழமை வேண்டுமா? இங்கு கூடியிருப்பவர்களை பார். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் குறைவு, இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏராளம். எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இளைஞர் கூட்டம்! 'இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்' என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறியதே ஞாபகத்துக்கு வருகிறது.

### போட்டியிராதென்று நினைக்காதே!

தேர்தலை ஒதுக்கிவிட்டோம்; இவர்கள்தான் தேர்தலுக்கு நிற்கவில்லையே ஏதாவது கூறட்டும் என்று விடுபார்ப்போம். நாங்கள் ஒரு கட்சி திட்டம் உள்ளவர்கள் ஒதுங்கி நிற்போம்; ஆனால் போட்டி இராதென்று நினைக்க வேண்டாம். சோஷலிஸ்டு கட்சி ஒருபுறம், ஹிந்துமகா சபை மற்றொருபுறம், தவிர இல்லாவிட்டால் கம்யூனிஸ்ட் கட்சி ஒருபுறம் உங்களைத் தேர்தலில் தாக்கப்போகிறது அரசியல் தெளிவுள்ளவர்கள் வேண்டுமானால் குறித்துக் கொள்ளட்டும் காங்கிரசுக்கு அடுத்த தேர்தலில் வெற்றி கிடைத்தால் அது அட்லி மெஜாரிடியாகத்தான் இருக்கும்.

### காங்கிரசின் கர்வம் குறைந்தே தீரும்

குடியை ரத்து செய்வேன் என்றும் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு நம் நண்பர் ராமனுதன் ஓர் கட்சி ஏற்படுத்துவாரானால், வருங்காலத்தில் பிற்போக்குவாதிகள் ஏன் ஆட்சியை அமைக்க முடியாது? சர். பி. டி. ராஜன் அரசியலில் பிரவேசிக்கப் போகிறேன் என்கிறார். யார் இவர்கள்? ஒருவர் நேற்று வரை உங்கள் தத்துப்பிள்ளையாக இருந்தவர், மற்றொருவர் ஆயிரமாயிரம் அடி ஆழத்தில் புதைக்கப்பட்டுவிட்டதென்று நீங்கள் கூறும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர். இவர்களெல்லோரும் தேர்தலுக்குப் போட்டியிடப் போகிறார்கள், அப்படிப் போட்டியிடும் நேரத்தில் முதல் தடவையாகக் காங்கிரஸ்மெஜாரிடிக்கட்சியாகலாம் ஆனால் எதிர்க்கட்சி ஏழு அல்லது எட்டு பேரைக் கொண்டிருக்காது. 70 பேரை அல்லது 80 பேரைக் கொண்டிருக்கும். இன்று இருப்பதைவிடக் கர்வம் குறைந்தவர்களாய், கிலி அதிகம் பிடித்தவர்களாய்க் காங்கிரஸ்காரர்கள் இருப்பார்கள். இந்நிலையும் 2 அல்லது 3 வருடங்களுக்கு தான். பின்பு வீழ்ந்துவிடுவார்கள்.

### சொன்னோம்: நடக்கிறது!

நாம்தான் முதலில் கூறினோம், ஒரு மனைவி இருக்கும்போது வேறு மனைவியைக் கட்டிக்கொள்ளக் கூடாதென்று. பலர் நம்மைக் கண்டித்தார்கள். சுயமரியாதைக்காரர்கள் பேச்சு செல்லதென்றார்கள். கும்பகோணத்தில் ஒரு மனைவியை உடையவன் மற்றொரு பெண்ணை மணந்தான் என்னும் குற்றத்துக்காக 2 ஆண்டுகள் சிறை. பத்து ஆண்டுகளுக்கு முன் சொன்னோம். இப்பொழுது சட்டம் பேசுகிறது. பெண்ணுக்குச் சொத்துரிமை இருக்கவேண்டும், நேய் மனபேதம் ஏற்பட்டால் விவாகரத்து செய்துகொள்ளலாமென்று கூறினோம். பலிக்காது என்றவர்களே இன்று கூடி சரியென்று சட்டம் இயற்றியுள்ளனர்.

### உருவாகியே தீரும்

சுயமரியாதைக்காரர்கள் பேச்சு பலிக்காமல் போய்விடாது. அவ்வளவும் பலிக்கிற விஷயம். "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது உண்மையான பிரச்னை. இன்பத் திராவிடம் விரைவில் உருவாகியே தீரும்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்று நாம் சில ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தபோது 'எலிவளை எலிகளுக்கே' என்று தலையங்கம் எழுதி ஆனந்தவிகடன் எள்ளி நகையாடிற்று. நாம் கூறியதை ஆணவக்காரர்களால் இல்லை-ஏமாளிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. நாலு வேதங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் அப்படியே 'மடமை' செய்யும் கூட்டத்துக்கு நாம் கூறும் 'திராவிடநாடுதிராவிடருக்கே' என்பது எப்படிப் புரியும்?

### சரிதம் படித்தவர்களைக் கேட்கிறேன்

திராவிடநாடு என்பது இப்பொழுதுள்ள சென்னை மாகாணத்தின் முழுப்பரப்பு என்று கூறலாம் அவர்கள் மாகாணம் என்கின்றார்கள், நாம் திராவிடம் என்கிறோம். தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்டதே திராவிடநாடு. இதை நாம் சரித்திரச்சான்றைக் கொண்டே கூறுகிறோம்; மறுக்கமுடியாத உண்மையைக்கொண்டே கூறுகிறோம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுகிறார் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளத் துளுவும் தமிழிலிருந்து தோன்றிய மொழிகளென்று அம்மொழிகளைப் பேசும் மக்கள் ஒன்றி வாழ முடியும் என்ற ஆதாரத்தைக் கொண்டே கூறுகிறோம், சரித்திரம் படித்தவர்களைக் கேட்கிறேன் திராவிடநாடு எந்த வகையில் நடைமுறைக்குச் சாத்தியமாகாதென்று. இராமகிருஷ்ண அவதாரங்கள் திராவிடநாட்டுக்கு அப்பால் எடுக்கப்பட்ட அவதாரங்கள். சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், அசோகன், ஹர்ஷன், புலிகேசி மன்னர்கள் என்றாவது நர்மதையைக் கடந்ததுண்டா? சரித்திரத்தைக் காட்டு அல்லாவுதீன் கில்ஜி நல்லெண்ணத் தூதனாக ஒருவனைக் காவேரிபூம்பட்டினத்துக்கனுப்பினான் அசோகன் தமிழ் மன்னனுக்கு வேண்டுகோள் விடுத்துத் தமிழ்நாட்டில் ஸ்தூபி நாட்டினான். வாளேந்திய எவனும் தமிழ்நாட்டுக்கு வந்ததில்லை. நூற்றுக்கு 12 பேரே படித்திருப்பதால் நான் கூறுவது புதிதாக இருக்கும். ஆனால் இனி புதிய தலைமுறை வரப்போகிறது. அவர்கள் எளிதில் புரிந்துகொள்வார்கள். சந்திரகுப்தன் ஆண்டான். எது வரை? தமிழ்நாடுவெளுபாக இந்திய தேசபடத்தில் விடப்பட்டிருக்கும் அசோகன் ஆண்டான், தமிழ்நாடு வெளுப்பாக விடப்பட்டிருக்கும்.

ஆகையினால்தான் கூறுகிறோம் திராவிடம் தனியாக வேண்டுமென்று. நாங்கள் ஆண்ட ராஜ்பத்தை, சிலப்பதிகாரம் தோன்றிய ராஜ்யத்தை, மூவேந்தர் ஆண்ட ராஜ்யத்தைத் தனி நாடாக வேண்டுமென்று கூறுகிறோம். திராவிடநாடு டில்லியுடன் இணைந்திருப்பதால் என்ன லாபம்? அடிமைப்படாதிருந்த நாட்களில்தான் இன்புற்று வாழ்ந்தோம்.

கரிபப்படைகடந்த நெடுஞ்செழியன் ஆண்ட நாடு இது அன்று தமிழர் ரோம் நாடு வரை சென்று வியாபாரம் செய்தார்கள். கைத்தறிகளில் நெய்யப்பட்ட உயர்ந்த ஆடை அணிகளை ரோம், கிரேக்க, நாடுகளில் விற்றார்கள்.

### வழிவகுக்க வேண்டாமா?

இன்று தமிழன் அஹமதாபாத் வேஷ்டிக்கும், ஷோலாப்பூர் சேலைக்கும், டால்மியா சிமிட்டிக்கும், டாடா இரும்புக்கும், பாபலால் வெள்ளி, பொன் நகைகளுக்கும் தவம் கிடக்க வேண்டியுள்ளது. தமிழன் கடல் கடந்து செல்கிறான்; வாளெடுத்துக் கொண்டல்ல, சந்தனமெடுத்துக் கொண்டல்ல, ரப்பர் தோட்டத்தில் வேலைசெய்ய; தேயிலை தோட்டத்தில் வேலை செய்ய. மார்வாடி வட்டிக்கடை வைக்கப்போகிறான். முல்தானி வியாபாரம் செய்து பணம் பறிக்கப் போகிறான், ஆனால் தமிழன் வயிற்றுக் கஞ்சிக்காகச் சவுக்கடி வாங்க போயிருக்கிறான். அந்நிலையை ஏன் சிந்திக்கக்கூடாது? அவர்கள் திரும்பிவந்தால், எங்கே தொழில்? அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி வகுக்க வேண்டாமா?

### ஓமந்தூராருக்கு!

"திராவிடநாடு திராவிடருக்கே" என்பது இந்தியக் குடியரசின் தலைவருக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால் புரிந்தவர்கள் சிலர் வருந்துகிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார் ஒருவர். திராவிடநாடு தனி நாடானால், படை இருக்காதே என்று அவர் வருந்துகிறார், அவர் கலக்கம் கண்ணியமானதுதான். ஆனால் நமக்கு நீண்ட கடற்கரை யிருக்கிறது. நாலரை கோடி மக்கள் இருக்கிறார்கள். போர் மூண்டுவிட்டதே என்றால் வாள் தீட்டக் கொல்லன் வீதேடும் காளைகள் இருக்கிறார்கள். ஆகையால் ஓமாந்தூராருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம் திராவிடநாடு தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளுமென்று. இரும்பு நிலக்கரி, தங்கம் இருந்தால் தனியரசு நடத்தலாம். இவைமட்டுமல்லாமல் அணுகுண்டு உற்பத்திக்குத் தேவையான யுரேனியம் கூடத் திருவாங்கூரில் கிடைக்கிறது. நம் நாடுகளின் வளத்தைப் பயன்படுத்திக் கொள்வோம். திராவிட நாடு தனி நாடு ஆனால் அன்னியச் சுரண்டல் அடியோடு ஒழிந்து போகும். மந்திரிகளின் அதிகாரம் மட்டற்று இருக்காது. இவைகளைச் செய்வதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம். இவ் வறிவுப் பிரசாரத்தைத் தடை செய்வதால் உனக்கு என்ன லாபம்? கொள்கைகள் மறைந்துவிடாது. கோபால் ரெட்டி கூடக் கூடுவார். இன்னும் 2 அல்லது 3 வருடங்களுக்கு நாடகம், பாட்டு, படம் மூலம் பதியவைத்தால் ஓமாந்தூரார் கூட இணங்கியமாகிவிடுவார். யார்தான் அக்கரை காட்ட முடியாது?

### எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

நாலரை கோடிமக்களுக்குத் தனி நாடு வேண்டுமென்றால் யாரும் மறுக்க முடியாது பாரதி கூறியபடித் தந்தையர் நாட்டை மீட்கவரும்படி எல்லோரையும் அழைக்கிறேன். மாணவ மாணவிகளை அழைக்கிறேன். நமக்கு வேண்டுவது கத்தியும் குண்டுமல்ல. பகுத்தறிவு. நெஞ்சில் உறம் நேர்மை; மாநாட்டுக்கு வராதவர்களுக்கு எடுத்துக்கூறுங்கள், ஞாயத்துக்கு ஆதரவு கொடுங்கள். படையமைத்து கொண்டு அறப்போர் தொடுக்கத் தயாராகுங்கள்". என்று பேசி முடித்தார்.

தோழர் அண்ணாதுரை சுமார் ஒன்றரை மணி நேரம் உணர்ச்சியுடன் பேசினார். பந்தலில் கூடியிருந்த மக்கள் பரவசத்துடன் கேட்டார்கள். உணர்ச்சிப்பெருக்கைக்கைதட்டல்மூலம் அடிக்கடி வெளிப்படுத்திப் பந்தலை அதிரச்செய்தார்கள்.

தோழர்அண்ணாதுரைசொற்பொழிவுக்கு அடுத்து நன்றியறிவித்தலுடன் மாநாடு இனிது முடிந்தது. (ந. கி)

# இரயில்வே இஞ்சினின் "ஆகஸ்டுத்தனம்!"

## மூன்றுஇஞ்சின்களைமுட்டித்தள்ளிவிட்டு அடங்காப்பிடாரியாய் ஓடிற்று!

திருச்சி மார்ச். 13—

இன்று பகல் 11-50 மணி அளவில், திருச்சி இஞ்சின் ஷெட்டில் நின்றுகொண்டிருந்த இஞ்சின் ஒன்று. திடீரென்று(!) தானாகக் கிளம்பி ஓடவாரம்பித்துவிட்டது! இதன் விளைவாக 3 இஞ்சின்களுக்குச் சேத மேற்பட்டுள்ளது. அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு காலி கூட்ஸ் வண்டி (டிரக்) ரயில்பாதையை விட்டுத் தாறுமாறாகக் கீழே இறங்கிவிட்டது.

இஞ்சின் மோதிக்கொண்டதின் விளைவாக உயிர்ச்சேதமொன்றுமில்லையெனத் தெரிகிறது அதிகாரிகள் மாலை 4-30 மணிக்குப் பார்வையிட்டுச் சென்றனர். (ந. கி.)

## அம்மான் நகர அமைப்புத் திட்டம்

அம்மான், மார்ச். 14—

அம்மான்நகரை மூன்றுகப் பிரிப்பதென்று மத்ய நகர அமைப்புத் திட்டக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. வசிக்கும் பகுதி, கைத்தொழில் பகுதி, வியாபாரப் பகுதி என்று இப்பிரிவுகள் பிரிக்கப்பட்டிருக்குமாம்.

வசிக்கும் பகுதி 'ஏ' வகுப்பு 'பி' வகுப்பு என்று இருவகைப்படுமாம்.

# கழக நடவடிக்கைகள்

தர்மபுரி:— 3-3-50ந் தேதி வெள்ளி மாலை 6 மணிக்கு வி. எஸ். நடேசனார் அவர்கள் மூங்கில் மண்டியில் செயற்குழுக் கூட்டம் தோழர் வி. எஸ் நடேசனார் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 வைத்திய வள்ளல் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

2. உள்ளூர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தோழர் . ஆர். இராசன் அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

3. சேலம் சிறைச்சாலையில் அரசியல் பாதுகாப்பு கைதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி 22 பேர்களைக் கொன்றும், சுமார் 100 பேருக்குமேல் படுகாயப்படுத்தியும் மிருகத்தனமாக நடந்து கொண்ட சிறையதிகாரிகளை கண்டிப்பதோடு இது சம்பந்தமாக சிறையதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமாய் இன்றைய ஆட்சியாளரைக் கேட்டுக் கொள்கிறது.

சாத்சந்திரபோஸ்மறைவுக்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. சேலம் மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் த. குட்டியப்பன் அப்துல் மஜீத் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் த. குட்டியப்பன் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

தென்காசி:— நகர திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் கூட்டம் 3-3-50 வெள்ளியன்று நடைபெற்றது. அவ்வமயம் தோழர் கோதைஅரசு தலைமை வகித்தார். தோழர் கே. ஆர். சுப்பையா இயலிசைப் பண் பாடினார். பின்னர் தோழர்கள் சுந்தரம், கே. ஆர். சுப்பையா, வி. எஸ். பாண்டியன், சங்கராஜ் ஆகியவர்கள் இயக்க கொள்கைகள், வளர்ச்சி, தொண்டு ஆகியவை பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தார். பின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. தோழர் சரத்சந்திரபோஸ் இறக்கை எய்தியமை குறித்து ஆழ்ந்தஅனுதாபம் தெரிவிக்கிறோம்

2. வாராசந்திர கூட்டத்திற்கு இரண்டு மாத காலம்வரை கலந்து கொள்ளாதத் தோழர்களை விலக்க செயற்குழுவுக்குஅதிகாரமளிக்கிறது.

3. மறைந்த தோழர் பன்னீர்செல்வம் அவர்கட்கு நினைவு நாள் கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது.

* * *

மன்னார்குடி:—1-3-50 மாலை 6-மணிக்கு ஆர், சம்பந்தன் அவர்கள் இல்லத்தில் செயலாளர் இளம்வழுதி தலைமையில் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்கூட்டு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வைத்தியவள்ளல் ஈ.வே.கிருஷ்ணசாமி அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. செயலாளர் இளம்வழுதி அவர்கள் நிரந்தரமாக உடல்நலக் குறைவாய் இருப்பதால் 25-2-50 ராஜினாமா தாக்கீதை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு, செயலாளர் பதவியைத் துணைச் செயலாளர் ஆர். சம்பந்தன் அவர்கள் வகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

சென்னை:—புரசை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று மாலை 7-30 மணிக்கு தோழர் டி. எஸ். வேலன் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் சேலம் சிறை நிகழ்ச்சியைக் கண்டித்தும், வைத்திய வள்ளல் மறைவுக்கு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

மதுராந்தகம்:—8-3-50 அன்று மாலை தி. மு. க. கட்டிடத்தில் தோழர் எம். எம். இராசமாதன் அவர்கள் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அது சமயம் வைத்திய வள்ளல் ஈ. வெ. கி. அவர்கள் மறைவுக்கு வருந்தியும், முற்போக்குக் கட்சியின் தலைவரான சரத்சந்திரபோஸ் மறைவுக்கு இக்கூட்டம் வருந்தியும், சேலம் சிறை நிகழ்ச்சியைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

தோழர் கி. பு. இரத்தினவேல் அவர்கள் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களை வரும் மாதத்தில் ஒருமுறை செங்கற்பட்டு மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும்படி கேட்டுக்கொள்வதாகவும், செங்கற்பட்டு மாவட்ட மாநாடு மதுராந்தகத்தில் கூட்டவும். அதற்கு ஆக வேண்டிய உதவிகளைப் பொதுச் செயலாளரைக் கலந்து முடிவு செய்ய ஓர் துணைக்குழு அனுப்புவது எனவும் சொன்னார். பின்னர் தோழர் சிவானந்தம் அவர்களால் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

கம்பம்:—தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 5—3—50 இரவு 10 மணிக்கு எம். கே. சிவந்தவு அவர்கள் தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது

சேலம் சிறையில் கம்யூனிஸ்ட் தோழர்களை துப்பாக்கிப்பிரயோகம் செய்ததற்குறித்து, வன்மையாக கண்டிக்கிறது.

ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கும், சரத் சந்திரபோஸ் அவர்கள் மறைவுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

தி. மு. க. வுக்கு சரியான ஒப்புக்கொள்ளப்பட்டது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை ஓர் பொதுக் கூட்டத்திற்கு அழைப்பதென தீர்மானிக்கலாயிற்று.

தோழர் டி. நடராசன் அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது, முடிவுற்றது.

* * *

சங்கரன்கோயில்:—4-3-50ந் தேதி நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

பெரியார் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் இறப்பைபெய்தியமைக்கு அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. சேலம் சிறையிலே அலுவலர்கள் நடத்திய துப்பாக்கி கோரத்தனத்தை வன்மையாகக் கண்டித்துத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

மேலைக்கத்தண்டார் கோட்டை:—4-3-50 சனியன்று இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் தோழர் டி. ஆர். கோவிந்தராசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

1. சேலம் சிறையில் சிறைப்படுத்தப்பட்டிருந்த அரசியல் கைதிகளில் 22 பேர்கள் உயிரிழக்கவும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயமுறவும் ஆன கொடுமை நிகழும்படி துப்பாக்கித் துளைத்தனம் நடத்திய அரசியலாரின் செய்கையைக் கண்டு இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. கட்சி சார்பற்ற தொழிலாளர்களில் அக்கறைக்கொண்டுள்ள பிரமுகர்களைக் கொண்டு மேற்கண்ட சம்பவத்தை பகிரங்க விசாரணை நடத்தும்படி இக்கூட்டம் அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறது.

# தி. மு. கழகத்தில் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டீர்களா?

இன்றேல் உடனே பதிவுசெய்து கொண்டு உறுப்பினராகுங்கள்!

உறுப்பினர் ஆக கடைசி நாள்

**31—3—50**

## பயிர்கள் சாவியாகிவிட்டன

### வட ஆற்காடு மாவட்டம் வாட்டமுறுகிறது

சென்னை, மார்ச். 13—

பருவ மழை இல்லாததால், பல இடங்களில் உணவு உற்பத்தி தவறிவிட்டது என்றாலும், சித்தூர் ஜில்லாவில் நல்ல மழை பெய்து குளம் குட்டைகள் நிரம்பி உணவு உற்பத்தி திருப்திகரமாக நடைபெற்று வருகிறதென்று தெரிய வருகிறது.

சில தாலுக்காக்களில் இரண்டாவது சாகுபடிக்கும் விதை விதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பூங்கனூர், மதனப்பள்ளி ஆகிய இடங்களில் பயிர் தொழில் மிகவும் திருப்திகரமாக நடைபெறுகிறது. மதனப்பள்ளியில் நவதானியம் நன்றாய் விளைந்து இருக்கிறதென்றாலும், போதிய பணவசதி இல்லாத காரணத்தால், கொள்முதல் ஏஜெண்டுகள் கொள்முதல் தீவிரமாக நடத்தமுடியவில்லை.

சித்தூர் ஜில்லா கலெக்டருக்கு 2,00,000 வரை நவதானிய சேகரிப்புக்காகக் கொடுத்து உதவலாம் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதால் இக்கொள்முதல் நன்றாக நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சித்தூரில் எவ்வளவு சுகமான நிலைமையிருக்கிறதோ அதற்கு நேர்மாறாக வடஆற்காடு ஜில்லாவில் பருவ மழை தவறியதால் விளைச்சல் தவறிவிட்டது. உணவுப்பொருளுக்கு ஆங்கு ஏராளமாக தேவை ஏற்பட்டிருக்கிறது.

## ஸ்டாலின் படம் களவு போனதால் ஸ்டிரைக்

டிரின்டே, மார்ச் 13—

இங்குள்ள கம்யூனிஸ்ட் தொழிலாளர் காரியாலயத்திலிருந்த ஸ்டாலின் படத்தை, இரு மாணவர்கள் எடுத்துச் சென்றுவிட்டதை ஆட்சேபித்து, துறைமுகத்தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்துவிட்டனர். கள்வர் கேட்டுப் படத்தைத் திருப்பிக் கொடுத்து மன்னிப்பு கேட்டபின்பே ஸ்டிரைக் வாபஸ்பெறப்பட்டது.

## மணம் கெடாமலிருக்க புது வழி!

சிட்னி, மார்ச். 13—

டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் அன்னாசிப் பழம், ஆய்ஸ்டர் மீன்கள், கன்றுகள் முதலியவை விரும்பத்தக்க சத்துக்களும், மணமும் எவ்வளவு நாட்களானாலும் கெடாமலிருக்கச் செய்ய ஆராய்ச்சிகளை ஆஸ்திரேலியா சர்க்கார் நடத்தி வருகிறது.

இதில் பூரண வெற்றி ஏற்படுமென்று சுகாதார விவசாய மந்திரி கூறுகிறார்.

## அன்பர்களுக்கு அறிவிப்பு

**“திராவிடன்”** ஆசிரியர்: N. V. நடராசன்

இதுவரை வாரந்தோறும் வெளிவந்துள்ளதானது; இம் மாதம்முதல் சில மாதங்களுக்கு மாத வெளியீடாக வெளிவரும்

‘திராவிடன்’ அச்சக அமைப்பு விரைவில் முடிவுற்றதும் வார வெளியீடும் தொடர்ந்து வெளியிடப்படும்

மாத வெளியீடு தனிப் பிரதி 0—4—0 ஆண்டு சந்தா 3—8—0

**ஏஜெண்டுத் தோழர்களுக்கு**

பிப்ரவரி மாதம் முடிய நிலுவையுள்ள ஏஜெண்டுத் தோழர்கள் முழுத் தொகையையும் இம் மாதம் 20-ந் தேதிக்குள் அனுப்பிவைத்தால்தான் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப்படும்.

மாத வெளியீடு ஏப்ரல் முதல் வாரத்தில் வெளிவரும்

நிர்வாகி: ‘திராவிடன்’

18, பெருமாள் முதலி தெரு, ஜி. டி. சென்னை.

## கலைவாணரின் கல்வித் தொண்டு

சென்னை, மார்ச். 13—

3-3-50 அன்று திருச்சியை அடுத்த செட்டிகுளத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் கிந்தனார் கதையும், காந்தி வில்லுப்பாட்டும் டிஸ்ட்ரிக்ட் போர்டு உயர்தரப்பாடசாலை உதவி நிதிக்காக நடைபெற்றது. சுமார் 10,000-க்கு மேற்பட்ட மக்கள் பல ஊர்களிலிருந்தும் வந்து திரளாகக் கூடியிருந்தனர். ஜில்லா போர்டு தலைவர் தோழர் ராஜா சிதம்பரம் அவர்கள் தலைமை வகித்து பாராட்டிப்பேசினார். பல வேறு கழகங்களிலிருந்து வாழ்த்து இதழ்களும், மலர் மாலைகளும் வழங்கிப்பாராட்டினார்கள். பள்ளிக்கூடக் கமிட்டியார் நன்றி கூறுகையில் ரூ. 11 ஆயிரம்வரை வசூலாகி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

4—3—50—ல் கோவில்பட்டியில் குகன்பாறை கலாசாலை நிதிக்க தோழர் இராமசாமிதாஸ் தலைமையில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் கிந்தனார்-காந்திமகான் கதை நடைபெற்றது சுமார் 15,000 ரூபாய்க்குமேல் வசூலாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. சுமார் 12 வாழ்த்து இதழ்களும், பல மலர்மாலைகளும் வழங்கப்பட்டன. ஊரெல்லாம் எங்கு திரும்பினாலும் மக்கள் கூட்டம் திரண்டு நிறைந்திருந்தது. கலைவாணரைக்காண ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

5-3-50 வள்ளியூரில் வடக்கங்குளம் சேரு பள்ளிக்கூட நிதிக்காக கதை நிகழ்ச்சி நடைபெற்றது நெல்லை ஜில்லாபோர்டு தலைவர் தோழர் ஆதிமூலம் தலைமை வகித்தார். பெருந் திரளாக மக்கள் ஜில்லா எங்குமிருந்து வந்து கலந்து கொண்டனர் குறிப்பாக வெளியார்கள் பலரும் காங்கிரஸ் முக்கியஸ்தர்களான சி. சோமயஜலு மேகநாதன் முதலியவர்களும் வந்திருந்தனர். வரவேற்புகள் பலவும் சிறப்புற அமைக்கப்பட்டன. கொட்டகை போக்கு வரவு மேடையாவும் திறம்பட அமைத்திருந்தனர், கலைவாணர் கிந்தனார் கதையிலே ரயில் வண்டி வரும் இடத்தை நெல்லை ஜில்லாவில் இன்றிருக்கும் ரயில் பிரச்னையுடன் இணைத்துப்பேசி, புரட்சிசெய்தது குறிப்பிடத்தக்கதாகும். இன்றையக் கச்சேரி பல வகையிலும் சிறப்புடையதாகும். 15,000 ரூபாய்க்கு மேல் நிதி சேர்ந்திருக்கலாம்

8—3—50 கல்லிடைக்குறிச்சி காந்தி ஹரிஜன பெண்கள் பள்ளி நிதிக்காக, தோழர் லெட்சுமி அம்மாள் எம். எல். ஏ. தலைமையில் கலைவாணர் கச்சேரி நடைபெற்றது. நெல்லை மாவட்டப் பிரமுகர்கள் பலரும் வருகை புரிந்திருந்தனர். இரவு விக்கிரமசிங்கபுரத்தில் பண்ணையார் சிவனுபாண்டியன் இல்லத்தில் பெரிய வரவேற்புகள் நடைபெற்றன. பொதுமக்களுக்காக வில்லுப்பாட்டுக் கச்சேரியைக் கலைவாணர் நிகழ்த்தினார். மக்கள் 5000-க்கு மேற்பட்டவர்கள் காலை 4மணிவரை பெருகி, கூடி அமைதியுடன் கேட்டனர்.

7—3—50-ல் நாகர் கோயில் நகரசபையில்கலைவாணருக்கும்,கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளைக்கும் வரவேற்பளிக்கப்பட்டச் செய்தி முன்னமேயே ‘மாலைமணி’யில் வந்துள்ளது அன்று மாலை நகரசபை சார்பில் காந்திமகான் வில்லுப்பாட்டை கவிமணி தேசிகவிநாயகம் அவர்கள் தலைமையில் கலைவாணர் நிகழ்த்தினார். மற்றொரு முறை பொதுமேடையமைத்து பொதுமக்களுக்கு வில்லுப்பாட்டு விருந்தளிப்பதாக தோழர் என். எஸ். கே. தெரிவித்தார்.

## டேனிஷ் ‘குவிஸ்லிங்’களுக்கு மன்னிப்பு

கோபன்ஹேகன், மார்ச். 13—

டேனிஷ் மன்னர் பிரடெரிக் தன் 51-வது பிறந்த தின வைபவத்தை யொட்டி, சுமார் 100 குவிஸ்லிங்களுக்கு மன்னிப்பு அளித்திருக்கிறார்.

டென்மார்க், ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்தபோது அவர்களின் அனேகம்பேர்களுக்கு 12 ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்பட்டது. சென்ற ஆண்டு 10 ஆண்டுவரை தண்டனை பெற்றவர்கள் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆயுள்பரியந்தம் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தவிர, மற்றவர்கள் அடுத்த ஆண்டு விடுதலை செய்யப்படலாம் என்று தெரிகிறது. —ரூலோம்.

## சீக்கிரமாக கட்டிடங்களை கட்ட வழி

லண்டன், மார்ச். 13—

இப்பொழுதுள்ள செங்கல்லைவிட 6 மடங்கு பெரிதாக உள்ள செங்கற்களை, கட்டிடம் கட்ட உபயோகித்தால் கட்டிடம் சீக்கிரம் கட்டிவிடலாம் என்று சில கட்டிட மேஸ்திரிகள் கூறுகின்றனர்.

இவை இடத்தை சீக்கிரம் அடைப்பதுடன் அதிக வேலையாட்களின் அவசியத்தையும் குறைப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

## இஸ்தான்புல்லுக்கு யு. எஸ். கடற்படை வருகை

இஸ்தான்புல், மார்ச். 13—

துருக்கியில் இஸ்தான்புல்லுக்கருகிலுள்ள பாஸ்போரஸ் துறைமுகத்திற்கு யுனைடெட் ஸ்டேட் கடற்படை யூனிட் ஒன்று வந்திருக்கிறது.

* * *

## சிவகாசியில் வரவேற்பு

சிவகாசி, மார்ச். 12—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கோவில்பட்டிச் சென்று திரும்பும் வழியில் 4-3-50 இரவு இங்கு வந்து தங்கினார். அதுபோது சிவகாசி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் சுப்பையா அவர்களால் கலைவாணருக்கு மாலையளிக்கப்பட்டது. (வி-உ)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1